# Judicial Form No.53

(See Rule 43)

## DEPOSITION OF WITNESS

## (CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவெண்ணெய்நல்லூர்.

C.C. No. 441/2024

2025-ம் ஆண்டு நவம்பர் மாதம் 26-ம் தேதி புதன்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 8 -வது நபரின் வாக்குமூலம். (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. V. செல்வகோபால், Grade,III, Bench Clerk அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 8 | தொழில் | - | கரும்பு வெட்டும் வேலை |
| பெயர். | - | சிவா | வட்டம் | - | திருவெண்ணெய்நல்லூர் |
| த/பெ. | | முருகன் | சமயம் | - | |
| கிராமம் | - | அண்டராயநல்லூர் | வயது | - | 33 |

26.11.2025

எதிரி ஆஜர்

**முதல் விசாரணை.**

1. நான் தற்போது அண்டராயநல்லூரில் வசித்து கரும்பு வெட்டும் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியாது . விபத்தில் இறந்துபோன வினையத்தான் என்பவரை தெரியாது. சுமார் 9 ஆண்டுகளுக்கு முன்பு இரவு 07.00 மணியளவில் நான் எனது இருசக்கர வாகனத்தில் வந்துகொண்டிருந்த போது எங்கள் ஊர் ஏரிக்கரை மேடு அருகே சத்தம் கேட்டு அங்கு சென்றேன்.

2. அப்போது அங்கு ஒருவருக்கு தலையில் காயம் ஏற்பட்டிருந்தது. நான் எனது தொலைபேசி மூலம் தெரிந்தவருக்கு தகவல் தெரிவித்தேன். அவர்கள் அங்கு வந்து ஆம்புலன்ஸ் மூலம் காயமடைந்தவரை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அந்த நபருக்கு எவ்வாறு காயம் ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது. போலீசார் விசாரணை செய்யவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரியதில் அனுமதி வழங்கப்பட்டு சாட்சி அரசு தரப்பால் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.)**

1. கடந்த 06.06.2016 ம் தேதி நானும், எதிரியும் PY01BH7173 என்ற பஜாஜ் இருசக்கர வாகனத்தில் பயணம் செய்தோம் என்றாலும், மேற்படி வாகனத்தை எதிரி ஓட்டினார் என்றாலும், இரவு 07.30 மணியளவில் டி.புதுப்பாளையம் கிராமத்தில் உள்ள பச்சையத்தாள்கோவில் அருகே சென்றுகொண்டிருந்த போது, திருக்கோவிலூர் மார்க்கமாக இரண்டு நபர்கள் ரோட்டு ஓரமாக நடந்து சென்று கொண்டிருந்தார்கள் என்றாலும், அப்போது எதிரி இருசக்கர வாகனத்தை அதிவேகமாக ஒட்டிச்சென்று அதில் ஒருவர் மீது மோதி விபத்து ஏற்படுத்தினார் என்றாலும், விபத்தில் காயமடைந்தவர் வினையத்தான் என்றும், மற்றொருவர் வடிவேல் என்று தெரிந்துகொண்டேன்எ ன்றாலும், மேற்படி சம்பவத்தை நேரடியாக பார்த்துவிட்டு, போலீசார் விசாரணையில் தெரிவித்துவிட்டு, தற்போது உண்மையை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

திருக்கோவிலூரிலிருந்து புதுப்பாளையம் நோக்கி வரும் போது வினையத்தான் அடிப்பட்டு கிடந்ததாக சொல்கிறேனே அவருடன் வேறு யாராவது இருந்தார்களா என்றால் வேறு யாரும் இல்லை, நான் தான் முதல் ஆளாக பார்த்தேன். வினையத்தானை இடித்த வண்டியையோ, இடித்த நபரையோ பார்த்தேனா என்றால் இல்லை, யாரும் கிடையாது.

(Sd/-R.Senthilkumar)
D.M-cum-JM.
T.V.Nallur.